[2020 பிப்ரவரி 20

(ஈ) சென்னை, வால்டாக்ஸ் சாலை, நயினார் பாலம் மூடப்பட்டுள்ளது குறித்து

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, வால்டாக்ஸ் சாலையில் அமைந்திருக்கின்ற நயினார் பாலம் என்பது, கடந்த 27–12–2016 அன்று இருப்புப் பாதைகளை விரிவுபடுத்துவதற்கும், அகலப்படுத்துவதற்கும் மூடப்பட்டது. தற்போது, மூன்றாண்டுகள் முடிந்து, நான்காம் ஆண்டு தொடங்கியிருக்கின்றது. இதுசம்பந்தமாக, 2018 ஆம் ஆண்டு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்கூட, 30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அறிவித்தார்கள். அப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் அந்தப் பணம் பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றது. அந்த இடமானது பல்வேறு பகுதிகளை இணைக்கின்ற ஒரு பாலம். அதோடு அரசு பொது மருத்துவமனை, சென்னை இரயில்வே நிலையங்கள் போன்ற பல்வேறு இடங்களுக்கு பயணிகள் தினந்தோறும் இலட்சக்கணக்கிலே பயணிக்கின்ற பகுதி. இன்றைக்கு பொது மக்கள் போக்குவரத்து நெரிசலில் சிக்கி, திணறிக்கொண்டிருக்கின்றார்கள். தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில்* TANGEDCO, TANTRANSCO *ஆகிய இரு நிறுவனங்கள் அங்கே பணியிலே ஈடுபட்டிருந்தாலும், பணி துரிதப்படுத்தப்படவில்லை. ஆகவே, மக்களுடைய போக்குவரத்து நெரிசலைக் கருத்தில்கொண்டு, படித்தவர்கள், பள்ளிக்குச் செல்பவர்கள், பணிக்குச் செல்பவர்கள், வியாபார பெருமக்கள் வரை அனைவரும் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றார்கள். ஆகவே, அந்தப் பணியை விரைவுபடுத்தி இந்த ஆண்டாவது சென்னை மாநகராட்சியின் சார்பில் கட்டப்பட வேண்டிய அந்தத் தொகையை முழுமையாகச் செலவிட்டு, அந்தப் பணியை உடனடியாக ஆரம்பித்து, பொது மக்களை போக்குவரத்து நெரிசலிலிருந்து காப்பாற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருநகர சென்னை மாநகராட்சியில் வால்டாக்ஸ் சாலை மற்றும் இராஜா முத்தையா சாலைகளை*

2020 பிப்ரவரி 20] [திரு. எஸ்.பி. வேலுமணி]

இணைக்கும் யானை கவுனி பால சாலையில் அமைந்துள்ள யானை கவுனி பாலம் இரயில்வே துறையைச் சார்ந்ததாகும். இப்பாலத்தின் இருபுறமும் உள்ள அணுகுசாலைப் பகுதி மட்டுமே பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பாலம் மிகவும் பழுதடைந்துள்ள காரணத்தினால், கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் செல்வதற்கு இரயில்வே துறை மற்றும் போக்குவரத்துக் காவல் துறையால் தடை செய்யப்பட்டுள்ளது. இப்பாலத்தில் இருசக்கர வாகனங்கள் மட்டுமே செல்ல அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இப்பாலத்தின்கீழ் உள்ள இருப்புப் பாதைகளை கூடுதலாக அமைப்பதற்கு ஏதுவாக, பாலத்தின் இரயில்வே பகுதிகளை 50 மீட்டரிலிருந்து 150 மீட்டர் நீளத்திற்கு இரயில்வே துறை நீட்டிக்க உள்ளது. இப்பாலத்தை இடித்துவிட்டு புதிய மேம்பாலம் அமைக்கும் பணியில் தற்போது 50 மீட்டர் நீளமுள்ள இரயில்வே பகுதி பாலம் அமைப்பதற்கு இரயில்வே துறை பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து நிதி பங்களிப்பாக, 50:50 என்ற விகிதாசாரத்தில் புதிதாக 100 மீட்டர் வரை நீட்டிக்கவுள்ள பகுதியில் பாலம் அமைக்கும் பணி முற்றிலும் இரயில்வேதுறை நிதிமூலம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இரயில்வே பகுதி பாலப்பணிக்கான பொது சீரமைப்பு வரைபடத்தை இரயில்வே துறை, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சமர்ப்பித்தது. அந்த வரைபடத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் 28–2–2018 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அணுகுசாலைப் பகுதிக்கான வடிவமைப்பு மற்றும் வரைபடம் தயாரிக்கும் பணிக்கு உரியவர் தெரிவு செய்யப்பட்டு, வடிவமைப்பு மற்றும் மதிப்பீடு தயாரிக்கும் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிக்கான மதிப்பீட்டுத் தொகை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, ரூ.30 கோடியாகும். பழுதடைந்துள்ள இரயில்வே பாலத்தின்கீழ் இரயில்வே துறையால் இரும்புத் தூண்கள் நிறுத்தப்பட்டு பலப்படுத்தப்பட்டுள்ளது. யானை கவுனி மேம்பாலத்தில் கனரக மற்றும் இலகுரக வாகனப் போக்குவரத்து ஏற்கெனவே தடை செய்யப்பட்டிருக்கிறது.

பேசின் பால சாலை மற்றும் இராஜா முத்தையா சாலை, ஈ.வே.ரா. பெரியார் சாலை வழியாக போக்குவரத்து திருப்பி விடப்பட்டிருக்கிறது. மேலும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தளவாடங்களை மாற்றியமைப்பதற்கு, பாலத்தை இடிப்பதற்கு

[திரு. எஸ்.பி. வேலுமணி] [*2020 பிப்ரவரி 20*

ஏதுவாக, தற்போது இப்பாலத்தில் இருசக்கர வாகனங்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இரயில்வே பகுதி பாலப் பணிக்கான மதிப்பீடுகள் இரயில்வே துறையால் தயாரிக்கப்பட்டு பழைய பாலத்தினை இடித்துவிட்டு, புதிய பாலம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. எனவே, இரயில்வே துறையால் பழைய பாலத்தினை இடிப்பதற்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, அவை இறுதி செய்யப்பட்டு, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தளவாடங்களை மாற்றியமைத்த பின்னர், பழைய பாலத்தினை இடிப்பதற்கான பணிகள் தொடங்கப்படும் எனவும், புதிய பாலத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் தனியே கோரப்படும் எனவும் இரயில்வே துறை அறிவித்துள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, மிக அதிகமான விலைப்புள்ளி பெறப்பட்டதால், இந்த ஒப்பந்தப்புள்ளி இரத்து செய்யப்பட்டு, மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப்புள்ளி நாள் 6–3–2020; ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்ட பின்னர், இரயில்வே துறையின் பணிகள் துவங்கப்படும்போது, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிக்கான பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) தூத்துக்குடி மாவட்டம், கடற்கரை மீனவக் கிராமங்கள் கடலரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தூத்துக்குடி மாவட்டத்தில் மீனவக் கிராமங்களாக இருக்கின்ற ஆலந்தலை, வீரபாண்டியன்பட்டணம், அமலிநகர், மணப்பாடு, பெரியதாழை ஆகிய கடற்கரைக் கிராமங்கள் கடலரிப்பினால் பாதிக்கப்படுவது குறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*